**NON – MAJOR ELECTIVE COURSE (NMEC-1)**

**Introduction to Indian Constitution**

**Unit – IV**


## IV.1. State Government:

மாநில அரசு:

இந்திய அரசியலமைப்பு நடுவண், மாநில அரசுகளுக்கான தனித்தனி நிர்வாக முறைகளைக் கொண்ட கூட்டாட்சி அரசாங்கத்தை வழங்குகிறது. இக்கூட்டாட்சியில், தேசியத்தலைநகரான டெல்லியுடன் 9 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 28 மாநிலங்கள் உள்ளன.

நடுவண் - மாநில அரசுகளுக்கான ஒரு சீரான நிர்வாக அமைப்பினை ஏற்படுத்த அரசியலமைப்பு வழிவகுக்கிறது. அரசியலமைப்பின் பகுதி IV-இல் 152 முதல் 237 வரையிலான சட்டப்பிரிவுகள் அனைத்து மாநிலங்களுக்கான சீரான அமைப்பினைப் பற்றி குறிப்பிடுகிறது.

நடுவண் அரசைப் போன்று மாநில அரசுகளும் நிர்வாகத்துறை, சட்டமன்றம், நீதித்துறை என்ற மூன்று பிரிவுகளின்கீழ் இயங்குகின்றன.



## IV.2. State Legislature (Legislative Assembly-Legislative Council):

**மாநில சட்டமன்றம்:**

சில மாநிலங்கள் இரு சபைகள் கொண்ட சட்டமன்றங்களையும் சில மாநிலங்கள் ஒரே சபையைக் கொண்ட சட்டமன்றங்களையும் ஏற்படுத்திக்கொள்ளாமென்று அரசியமைப்பிலுள்ள 168-வது விதி கூறுகிறது.

கர்நாடகம், ஜம்மு காஷ்மீர், பீகார், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இரு சபைகள் கொண்ட சட்டமன்றங்களைப் பெற்றுள்ளன.

கீழ் சபை (Legislative Assembly) சட்டப்பேரவை என்றும் மேல்சபை சட்ட மேலவை (Legislative Council) என்றும் அழைக்கப்படும்.

**சட்டப்பேரவை (LegislativeAssembly):**

மாநில சட்டமன்றங்களிலுள்ள கீழ்சபை மக்களாலே நேரடியாக ஐந்தாண்டுப் பதவி காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறது. கீழ்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 500க்கு மிகாமல், அறுபதுக்கும் குறையாமலிருக்கவேண்டும். மிசோரம், கோவா மாநில சட்டப்பேரவையில் நாற்பது உறுப்பினர்கள் இருப்பார்கள்.

கீழ் சபையின் உறுப்பினராக விரும்புபவர் இந்தியக் குடிமகனாகவும், 24-ம் அதற்கும் மேற்பட்ட வயதினராகவும் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்களின் மாத ஊதியம் ரூ.105000. ஆகும். சபையின் ஐந்தாண்டுப் பதவிக்காலம் முடிந்ததும் சபை தானாகவே கலைக்கப்படுகிறது. அல்லது பதவிக்காலம் முடியும் முன்பே முதல்வரின் பரிந்துரையின் மீது ஆளுநரால் கலைக்கப்படலாம்.

தேசிய நெருக்கடியிருக்கும் காலத்தில் கீழ் சபையின் ஐந்து ஆண்டு பதவிக் காலத்தை ஓராண்டிற்கு மிகாமல் பாராளுமன்றம் சட்டமியற்றி நீட்டிக்கலாம். எந்தச் சூழ்நிலையிலும் தேசிய நெருக்கடி முடிந்த நாளிலிருந்து ஆறுமாதத்திற்கு அதிகமாக பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது.

கீழ்சபை தன்னுடைய சபாநாயகரையும், துணை சபாநாயகரையும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. அவர்கள் சபையின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். உறுப்பினர் பதவியை இழந்தால் அவர்கள் பதவிகளிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

சபாநாயகரை விலக்க வேண்டுமாயின், தீர்மானம் கொண்டுவர 14 நாட்கள் முன்னறிவிப்பு வேண்டும். பேரவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் விலக்கப்படுவார்.

பேரவைக் கலைக்கப்பட்டாலும் அதன் சபாநாயகர் பதவியிலிருந்து விலக வேண்டியதில்லை. பதிய பேரவையின் முதல் கூட்டர் தொடரின் முதல் அமர்வு வரையில் அவர் பதவியில் நீடிக்கலாம்.

சபாநாயகர் பதவி வெற்றிடமாயிருக்கம் பொழுது துணை சபாநாயகர் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்துவார்.

சபாநாயகரையோ அல்லது துணை சபாநாயகரையோ பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்பதற்காக கொண்டுவரப்படும் தீர்மானங்கள் சபையில் விவாதிக்கப்படும் பொழுது அவர்கள் சபைக் கூட்டங்களுக்கு தலைமை தாங்கக் கூடாது. ஆனால் சபையின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

பண மசோதாக்கள் கீழ்சபையில்தான் முதலில் தாக்கல் செய்யப்பட வேண்டும். கீழ்சபை நிறைவேற்றிய பண மசோதாக்கள் மேலவைக்கு அனுப்பிவைக்கப்படும். மேல் சபையில் அவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அசவியமில்லை.

பண மசோதா வந்த இரண்டு வாரத்திற்குள் விவாதித்து அதன்மேல் பரிந்துரைகளை கீழ்சபை ஏற்கவோ, மறுக்கவோ செய்யலாம். 14 நாட்களுக்குப் பிறகு பண மசோதாவை இரண்டு சபைகளும் நிறைவேற்றியதாகக் கருதப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என்ற கேள்வி எழுந்தால், அதைப்பற்றிய பேரவை சபாநாயகரின் முடிவு கடைசியானதாகும். சாதாரண மசோதாக்கள் எந்தவொரு சபையிலும் சமர்ப்பிக்கப்படலாம்.

பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவானது மேல்சபைக்கு அனுப்பி வைக்கப்படும். மேல்சபையானது மசோதாவை அப்படியே நிறைவேற்றி வைக்கலாம். திருத்தங்களுடன் நிறைவேற்றலாம் அல்லது நிராகரிக்கலாம். மசோதாவை நிறைவேற்றாமல் மூன்று மாத காலம், காலம்தாழ்த்தலாம். மூன்று மாதம் கழித்தபிறகு மசோதா பேரவைக்குத் திரும்பி வரும்.

மேல்சபையால் செய்யப்பட்ட திருத்தங்களை ஏற்றோ ஏற்காமலோ சட்டப்பேரவை இரண்டாவது முறை மசோதாவை நிறைவேற்றி மீண்டும் மேல் சபைக்கு அனுப்பி வைக்கும். இரண்டாவது தடவையாக வந்துள்ள மசோதாவின் மீது மேல்சபை என்னவிதமான நடவடிக்கை எடுத்தாலும், பேரவயைால் மசோதா என்ற வடிவத்தில் நிறைவேற்றியுள்ளதோ அதே வடிவத்தில் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். மாநில அமைச்சரவை சட்டப் பேரவைக்கு மட்டும்தான் கூட்டாகப் பொறுப்புள்ளது.

**சட்ட மேல்சபை (Legislative Council):**

மேல் சபையானது மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மேல்சபை நிரந்தரமானது. அதைக் கலைக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது. கீழ்சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மிகாமல், அதே நேரம் நாற்பதுக்கும் குறையாமல் மேல்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும்.

தற்போது இந்தியாவில் பீகார், ஜம்மு காஷ்மீர், கர்நாடகம், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களில் மட்டும் மேல்சபை உள்ளது.

மேல்சபையானது கீழ்கண்ட முறையில் அமைக்கப்படுகிறது.

- மூன்றில் ஒருபங்கு உறுப்பினர்கள், நகராண்மைக் கழக உறுப்பினர்களும், வட்டார ஆட்சி உறுப்பினர்களும், உள்ளூராட்சி உறுப்பினர்களும் அடங்கிய தேர்தல் தொகுதியால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.
- பன்னிரெண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள், மூன்றாண்டுகளுக்கு முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளடங்கிய தேர்தல் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.
- பன்னிரெண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பல்வேறு கல்வி நிலையங்களில் மூன்றாண்டுகளுக்கு அதிகமாக பணிபுரிந்துவரும் ஆசிரியர்களடங்கிய தேர்தல் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.
- மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்டபேரவை (கீழ்சபை) உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களாகயிருத்தல் கூடாது.
- மீதியுள்ள எண்ணிக்கை உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றார்கள். இவர்கள், இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு போன்ற துறைகளில் அனுபவம் பெற்றவர்களாகவும் சேவை செய்தவர்களாகவும் இருக்க வேண்டும். ஆறில் ஐந்து பங்கு உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் மூலமும் ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கவர்னர் நியமனம் மூலமும் உறுப்பினர்களாக உள்ளனர்.

மேல் சட்டசபைக்கு உறுப்பினராக விரும்புபவர் இந்தியக் குடிமகனாகவும், முப்பதும் அதற்கு மேற்பட்ட வயதினராகவும் இருக்க வேண்டும். உறுப்பினர்கள் ஆறாண்டுப் பதவிக் காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டாண்டிற்கு ஒருமுறை ஓய்வு பெறுகின்றார்கள்.

மேல்சபையின் உறுப்பினர்களிலிருந்து இரண்டுபேர், தலைவராகவும், துணைத் தலைவராகவும் உறுப்பினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இவர்களைப் பதவியிலிருந்து நீக்க 14 நாட்கள் முன் அறிவிப்பு கொடுக்க வேண்டும். விலக்கல் தீர்மானம் சபையின் பெரும்பான்மை ஆதரவோடு இயற்றப்பட வேண்டும். விலக்கல் தீர்மானம் விவாதிக்கபடும் பொழுது அவர்கள் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் கூடாது.

**மேல்சபையின் நிலை:**

மாநிலங்களிலுள்ள மேல் சபைகள் மிகவும் பலவீனமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அவைகள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

சிறிய சபைகளாக அமைக்கப்பட்டுள்ளன. எல்லா பண மசோதாக்களும் கீழ் சபையில்தான் ஆரம்பமாக வேண்டும். மேல்சபை பண மசோதாவை விவாதித்தாலும் கூட 14 நாட்களுக்குள் பரிந்துரைகள் மட்டும்தான் செய்ய முடியும்.

இதனால் நிதிச் சட்டமியற்றும் துறையில் மேல் சபையானது மிகவும் பலவீனமான சபையாக உள்ளது.

சாதாரண மசோதாக்கள் எந்தவொரு சபையிலும் சமர்ப்பிக்கப்படலாமென்றாலும், முக்கியமான மசோதாக்களும் அரசாங்க மசோதாக்களும் முதலில் கீழ்சபையில்தான் ஆரம்பமாகின்றன. சாதாரண மசோதாக்களை மேல்சபை நிராகரிக்கலாம், திருத்தம் கொண்டுவரலாம். மூன்று மாத காலத்ததிற்கு தடுத்து நிறுத்தி வைக்கலாம் என்றாலும், கீழ்சபையானது பிரச்சனைக்குரிய மசோதாவை இரண்டாவது முறை நிறைவேற்றினால், மசோதாவானது இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.

இங்கிலாந்தில் மேல்சபையானது பிரபுக்கள் சபையாகும். பண மசோதாவை ஒரு மாத காலத்திறகும், மற்ற மசோதாக்களை ஓராண்டுக் காலத்திற்கும் தடுத்து நிறுத்த முடியும். இதனால் ஆங்கில பிரபுக்கள் சபையைவிட இந்திய மாநில மேல்சபை பலவீனமானது என்பது புலனாகிறது.

மேலும், மேல்சபை உறுப்பினர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவதும், சில உறுப்பனர்கள் ஆளுநரால் நியமிக்கப்படுவதும் அமைச்சரவை கீழ்சபைக்கு மட்டும் பொறுப்புள்ளதாக இருப்பதும், மேல்சபையின் நிலையை மிகவும் பாதிக்கின்றன. இதனால், மேல்சபைக்கான ஆதரவு மக்களிடத்தில் குறைந்துகொண்டு வருகிறது.

மேற்கு வங்காளம், பஞ்சாப், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மேலவைகள் ஒழிக்கப்பட்டுள்ளன. மேல்சபையை நீக்குவதற்கு, பேரவையில் மூன்றில் இரண்டு பொரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றிப் பாராளுமன்றத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும். பாராளுமன்றமும் அதற்காகச் சட்டமியற்றினால், குறிப்பிட்ட மாநிலத்தின் மேலவை நீக்கப்படுகிறது. மாநிலத்தில் மேலவையை அமைத்துக்கொள்ளவும், நீக்கவும், பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டியது அவசியமாகும்.

## IV.3. Powers and Functions of the State legislature

**மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும்:**

மாநில அதிகாரப் பட்டியலிலுள்ள எந்தவொரு பொருளைப் பற்றியும் மாநில சட்டமன்றம் சட்டமியற்றலாம். பொது அதிகாரப் பட்டியலில் கூறப்பட்டுள்ள ஒரு பொருளைப் பற்றிய சட்டமும் நிறைவேற்றலாம். ஆனால் பாராளுமன்றம் அப்பொருளைப் பற்றி சட்டமியற்றியிருந்து, இரண்டிற்குமிடையே முரண்பாடு இருந்தால், பாராளுமன்ற சட்டம்தான் அமுலுக்கு வரும். மாநில சட்டமன்றத்திற் மீது கீழ்கண்ட கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன.

தனியார் சொத்தை அரசாங்க உடமையாக்குதல் பற்றிய மாநில சட்டத்தை குடியரசுத் தலைவருடைய பரிசிலனைக்கு அனுப்பி அவருடைய ஒப்புதலைப் பெறவேண்டும்.

மாநில அரசு தோல்வி பற்றிய நெருக்கடிப் பிரகடனம் செய்து மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி புகுத்தப்பட்டால் மாநில சட்டமன்றம் கலைக்கப்பட்டு பாராளுமன்றம் அல்லது அதன் சார்பில் குடியரசுத் தலைவரே மாநிலத்திற்கான சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெறுகிறார்.

நாட்டின் நலனைக் கருதி, மாநில அதிகாரப் பட்டியலிலுள்ள ஒரு பொருளைப் பற்றி பாராளுமன்றம் சட்டமியற்றலாமென்று மாநில மேல்சபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்னை ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றினால், குறிப்பிட்ட பொருளைப் பற்றி பாராளுமன்றம் ஓராண்டு காலத்திற்கு சட்டமியற்றலாம்.

தேசிய நெருக்கடி அமுலில் இருக்கும்பொழுது, மாநில அதிகாரப் பட்டியலிலுள்ள எந்தவொரு பொருளைப் பற்றியும் பாராளுமன்றம் சட்டமியற்றலாம்.

மாநிலத்திற்குள் நடைபெறும் வர்த்தகம், வியாபாரத்தின் மீது அல்லது வெளியாருடன் நடைபெறும் வர்தகத்தின் மீது, மாநில அரசாங்கம் பொது நலன் கருதி, சில தடைகள் விதிக்க விரும்பினால் அதற்கான மசோதாவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்னதாக, குடியரசுத் தலைவரின் முன் சம்மதத்தைப் பெற்றாக வேண்டும்.

**சட்டமன்ற அதிகாரங்கள்:**

- அரசியலமைப்பின்படி மாநிலப்பட்டியலிலுள்ள அனைத்துத் துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றலாம்.
- பொதுப்பட்டியலிலுனம் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம். ஆனால் அதே சட்டத்தை நடுவண் அரசு இயற்றும்போது மாநில அரசின் சட்டம் செயலற்றதாகிவிடும்.
- மத்திய நாடாளுமன்ற நடைமுறையைப் போன்றே மாநில சட்ட மன்றத்தின் மசோதாவும் சட்டமாக நிறைவேற்றப்படுகிறது.

**நிதி அதிகாரங்கள்:**

- சட்டமன்றம் மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது.
- சட்டமன்றக் கீழவையானது மேலவையைக் காட்டிலும் பண நடவடிக்கைகளில் அதிக அதிகாரத்தைப் பெற்றுள்ளது.
- பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.
- சட்டமன்றக் கீழவையின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.

**நிர்வாகத்துறையின் மீது கட்டுப்பாடுகள்:**

அமைச்சரவையானது சட்டமன்றத்திற்குப் பொறுப்பானது. சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுன்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும். அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

## IV.4. State Executive – Governer of the State (with Powers and Functions)

### State Governer:

**மாநில ஆளுநர்:**

இந்திய மாநிலங்களுக்கு என்னவிதமான ஆட்சி முறை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி அரசியல் நிர்ணய சபையில் விவாதங்கள் நடைபெற்றன. மாநிலங்களுக்கு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர்கள் மாநிலத் தலைவர்களாகப் பதவியேற்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்கள். மாநிலத் தலைவரும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பிரதிநிதிகளும் அமைச்சர்களாகப் பதவி ஏற்றால் இவ்விரு நிறுவனங்களுக்கிடையே பிணக்குகளும், முட்டுக் கட்டைகளும் தோன்ற வாய்ப்புகள் ஏற்படலாம். இதனால் மாநிலத் தலைவர் அல்லது ஆளுநர் பதவியானது குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

மாநில ஆளுநரை குடியரசுத் தலைவர் ஐந்தாண்டு பதவிக் காலத்ததிற்கு நியமிக்கிறார். முன்னதாகவே கூட பதவியிலிருந்து அவர் விலக்கப்படலாம். ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு மட்டும்தான் பொறுப்புள்ளவர். ஆளுநராக நியமிக்கப்படுபவர் இந்திய குடிமகனாகவும், முப்பத்தைந்து வயதுள்ளவராகமிருக்க வேண்டும். பாராளுமன்றம் அல்லது மாநில சட்டமன்றங்களின் உறுப்பினராய் இருக்கக் கூடாது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் உறுப்பினர் பதவியைக் கைவிடவேண்டும்.

ஆளுநருக்கு அரசாங்க மாளிகையும், அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள ரூ.3,50,000 மாத ஊதியமாகவும், பாராளுமன்றத்தில் நிச்சயிக்கப்பெறும் மற்ற செலவுப் படிகளும் கொடுக்கப்படுகின்றன. ஊதியமும் மற்ற செலவப்படிகளும் அவருடைய பதவிக் காலத்தில் குறைக்கப்படுதல் கூடாது. ஆளுநர் பதவியேற்பதற்கு மன்னதாக தலைமை நீதிபதியின் முன்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஆளுநரின் நிலை:**

ஆளுநரின் பல்வேறு அதிகாரங்களை இரு வகையாக பிரித்துக் கூறலாம். 1. பெயரளவிற்கான அதிகாரங்கள்: மாநில ஆட்சி ஆளுநருடைய பெயரில் பொறுப்புள்ள அமைச்சர்களால் நடத்தப்படுகிறது. 2. தன் முடிவு அதிகாரங்கள்: மாநில சட்டசபையில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லையென்றால், முதலமைச்சரைத் தெரிந்தெடுத்து நியமனம் செய்யும் பொழுது ஆளுநர் தன் முடிவு அதிகாரத்தை உபயோகிக்கிறார். அஸ்ஸாம் மாநிலத்து ஆளுநருக்கு சில சிறப்பான அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டள்ளன.

மாநில சட்டசபையில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை ஆதரவில்லாத போதும் கீழ் சட்டசபையை கலைக்கும் விஷயத்திலும், மாநில அரசு தோல்வி பற்றிய அறிக்கையை குடியரசுத் தலைவருக்கு அனுப்பும்பொழுதும், ஆளுநர் தன் முடிவுப்படியே செயல்பட உரிமை உண்டு.

பல மாநிலங்களில் உறுப்பினர்கள் அடிக்கடி கட்சி மாறுவதன் காரணமாக, மாநில அரசுகள் அடிக்கடி கவிழ்வதும், புதிய அரசுகள் நிறுவப்படுவதுமான நிரந்தரமில்லாத சூழ்நிலை ஏற்படும் சமயத்தில் ஆளுநரின் நிலை முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது. அதிகாரங்கள் பெருகிவிடுகிறது. செல்வாக்கும் கூடிவிடுகிறது. மாநிலங்களில் அடிக்கடி தலைவராட்சி கொண்டுவரப்படுவன் மூலம், குடியரசுத் தலைவரின் பிரதிநிதியென்ற முறையில், மாநிலங்களில் ஆளுநர்கள் நேரடியாக ஆட்சி செலுத்துவது அதிகரித்துவிட்டது.

**ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்:**

ஆளுநர் மாநில நிர்வாகத்தின் தலைவராகச் செயல்படுவது மட்டுமல்லாமல் ஏராளமான அதிகாரங்கள் பெற்றவராகவும் திகழ்கிறார். சட்டப்பிரிவு 163-ன்படி, முதலமைச்சரின் தலைமையிலான அமைச்சரவையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி ஆளுநர் குறிப்பிட்ட சில நிகழ்வுகளைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்துகிறார்.

**ஆளுநரின் நிர்வாக அதிகாரங்கள்:**

- மாநில தலைமை வழக்கறிஞர் தேர்வாணைக்குழு உறுப்பினர்களை நியமிக்கிறார்.
- நியமிக்கப்பட்ட தேர்வாணைக்குழு (Puthi Sesice Commission) உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இல்லை.
- மாநில மேல்சபைக்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரை நியமிக்கலாம். மேலும் மொத்த உறுப்பினர்களில் ஆறில் ஒரு பங்கு உறுப்பினரை நியமனம் செய்வார்.
- மாநிலத்தின் நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரிடம் விடப்பட்டுள்ளது. அவ்வதிகாரங்களை அவராகவோ அல்லது உயர் அதிகாரிகள் மூலமாகவோ செயல்படுத்தலாம்.
- ஆளுநர், தனக்கு உதவி புரியவும், அறிவுரை கூறவும் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவையை நியமிக்கின்றார். ஆளுநருக்கு என்னவிதமான அறிவுரை அமைச்சர்களால் வழங்கட்டதென்பதை நீதிமன்றங்கள் விசாரிக்க அதிகாரம் கிடையாது.
- ஆளுநர் முதலமைச்சரை நியமிக்கின்றார். முதல்வரின் பரிந்துரையின்மீது மற்ற அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கின்றார்.
- அமைச்சர்கள் ஆளுநரின் தயவில் அல்லது அவர் விரும்பும் காலம் வரைக்கும்தான் பதவியில் இருக்க முடியும். ஆனால் நடைமுறையில் எதுவரையில் கீழ் சபையின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுவருகின்றார்களோ, அதுவரையில் பதவியில் நீடித்திருக்கலாம்.
- மாநில அரசின் எல்லாவிதமான நிர்வாக செயல்களும் ஆளுநரின் பெயராலேயே நடைபெற வேண்டும்.
- ஆட்சித்துறையைப் பற்றி அமைச்சரவையால் எடுக்கப்பட்ட முடிவுகளும், கொண்டுவரப்போகிற மசோதாக்களைப் பற்றிய விவரமும், ஆளுநரால் தேவைப்படுகின்ற செய்திகளும் அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அமைச்சரவையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அவ்வாறே செய்ய வேண்டும்.

**ஆளுநரின் சட்டம் சார்ந்த அதிகாரங்கள் (Ligilative Powers):**

- ஆளுநர் சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால், அவர் சட்டமன்றத்தின் உறுப்பினராக இல்லை. ஆளுநர் பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.
- ஆளுநர் சட்டமன்றத்தைக் கூட்டத்தைக் கூட்டவும் ஒத்திவைக்கவும் சட்டமன்றத்தைக் கலைக்கவும் உரிமை பெற்றுள்ளார்.
- தேர்தல் முடிந்து சட்டசபை அமைந்த முதல் கூட்டத்தொடரிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டு முதல் கூட்டத்தொடரிலும் உரையாற்றுகிறார்.
- நிலுவையிலுள்ள மசோதா குறித்து சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்போது சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த எந்தச் சட்டமன்ற உறுப்பினரை வேண்டுமானாலும் ஆளுநர் நியமனம் செய்யலாம்.
- ஆங்கிலோ இந்தியன் வகுப்பினரலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
- இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து மாநில சட்ட மேலவையின் 6இல் ஒரு பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
- மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும் ஆளுநர் கையொப்பமிட்ட பின்னர் மட்டுமே சட்டமாகும்.
- ஆனால் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்பொழுது ஆளுநர் கையொப்பமிடலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம் அல்லது மீண்டும் மறு பரிசீலனைக்காக சட்டமன்றத்திற்கே திருப்பி அனுப்பலாம்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவு 213-ன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கலாம்.
- ஆனால் அந்த அவசரச் சட்டம் 6 மாதத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும். அவசரச் சட்டத்தை எந்த நேரத்திலும் ஆளுநர் திரும்பப்பெறலாம்.
- மாநிலத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை, அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழுவின் அறிக்கை, அரசின் தணிக்கைக்குழு அறிக்கைகளைச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

**நிதி அதிகாரங்கள்:**

- மாநிலத்தின் ஆண்டு வரவு-செலவு திட்டத்தினைத் தயார் செய்து சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யும் கடமை ஆளுநருக்கு அரசியலமைப்பு வழங்குகிறது.
- தேவைப்பட்டால், துணை வரவு-செலவு திட்டத்தையும் அறிமுகம் செய்யலாம்.
- ஆளுநரின் முன் அனுமதியுடன்தான் பண மசோதாவைச் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியும்.

- அரசின் எதிர்பாராச் செலவினங்களுக்காக ஆளுநர் அவசர நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.
- பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகளின் நிதிநிலையை ஆய்வு செய்ய ஒவ்வொரு ஐந்தாண்டிற்கு ஒருமுறை நிதி ஆணையம் ஒன்றை அமைக்கிறார்.

**நீதித்துறை அதிகாரங்கள்:**

- மாநில அரசின் தலைமை வழக்குரைஞரை நியமனம் செய்கிறார். உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையின்பேரில் மாவட்ட நீதிபதிகளின் நியமனம் மற்றும் பதவி உயர்வு போன்ற பணிகளை மேற்கொள்கிறார்.
- ஆளுநரின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை நியமனம் செய்கிறார்.
- குற்றவாளிகளின் கருணை மனு அடிப்படையில் குற்றவாளிகளை மன்னிக்கலாம் அல்லது குற்றவாளிகளின் தண்டனையைக் குறைக்கலாம் அல்லது நிறுத்திவைக்கலாம். (மரண தண்டனையைப் பெற்ற குற்றவாளியைத் தவிர)

**விருப்புரிமை அதிகாரங்கள்:**

- குடியரசுத் தலைவரின் பரிசிலனைக்காக ஆளுநர் ஒரு மசோதாவை நிறுத்திவைக்க முடியும். மாநில சட்டமன்றப் பொதுத்தேர்தலில் எந்த கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாதபொழுது, ஆளுநர் எந்தக் கட்சித் தலைவரையும் ஆட்சி அமைக்க அழைக்கலாம்.

**அவசரகால அதிகாரங்கள்:**

- மாநில அரசு அரசியலமைப்பு விதிகளுக்கேற்ப செயல்படவில்லையென்று ஆளுநர் உறுதியாக நம்பினால் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 356-இன் கீழ் மாநில அரசைக் கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம்.
- மாநில அரசு கலைக்கப்பட்டவுடன், மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வரும். ஆளுநர் குடியரசுத் தலைவரின் பிரிதிநிதியாக மாநிலத்தை நிர்வாகம் செய்கிறார்.

**ஆளுநரின் சிறப்புரிமைகள்:**

- சட்டப்பிரிவு 361(1) ஆளுநருக்கான கீழ்க்காணும் சிறப்புரிமைகளை வழங்குகிறது.
- தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச் செய்யவேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.
- ஆளுநரின் பதவிக் காலத்தில் அவர்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரைக் கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.

## IV.5. The Chief Minister of the State (With Powers and Fuctions)

### The Chief Minister of the State:

**மாநில முதலமைச்சர்:**

அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற முறையில் அமைந்த அரசில், ஆளுநர், மாநிலத்தின் பெயரளவு நிர்வாகியாகவும் முதலமைச்சர் உண்மையான நிர்வாகியாகவும் உள்ளனர். வேறுவகையில் கூற வேண்டுமாயின் ஆளுநர் என்பவர் மாநிலத்தின் அரசின் தலைவர், முதலமைச்சர் என்பவர் அரசாங்கத்தின் தலைவர்.

**முதலமைச்சர் நியமனம்:**

முதலமைச்சர் மாநில ஆளுநரால் நியமனம் செய்யப்படுகிறார். முதலமைச்சரின் பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றல்ல. சட்டமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு எவ்வளவு காலத்திற்கு தொடர்கிறதோ அதுவரை அவர் முதலமைச்சராக நீடிக்கலாம். சட்டமன்றத்தில் எப்பொழுது அவர் பெரும்பான்மைய இழக்கிறாரோ அப்பொழுது தனது பதவியை இராஜினாமா செய்கிறார். சட்டமன்றத்தில் மற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் போலவே முதலமைச்சரின் பதவிக்காலமும் 5 ஆண்டுகள் ஆகும்.

மாநில முதலமைச்சருடைய பதவி, அந்தஸ்தானது, மத்திய அரசின் தலைமை அமைச்சருடைய பதவி அந்தஸ்தை ஒத்திருக்கிறது. மாநில முதல்வர் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர். முதல்வரை ஆளுநர் நியமிக்க, மற்ற அமைச்சர்களை முதல்வர் பொறுக்கியெடுக்கின்றார். அமைச்சர்கள் பட்டியலைத் தயாரித்து ஆளுநருக்கு பரிந்துரை செய்ய, அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.

**முதலமைச்சரின் அதிகாரங்களும் பணிகளும்:**

**அமைச்சரவை தொடர்பானவை:**

- முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.
- அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
- தனது அமைச்சரவையை மாற்றி அமைக்கிறார்.
- அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
- அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகிறார்.

**ஆளுநர் தொடர்பானவை:**

கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

- மாநில அரசு வழக்குரைஞர்.
- மாநில தேர்தல் ஆணையர்.
- அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநிலத் திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
- மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

**சட்டமன்றம் தொடர்பானவை:**

- சட்டமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்தி வைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
- சட்டமன்றத்தில் கொள்கைகளை அறிவிக்கிறார்.
- சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.
- எந்த நேரத்திலும் சட்டமன்றத்தைக் கலைக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்கிறார்.

இவ்வளவு அதிகாரங்களும் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் என்ற முறையில் தான் அவர் பெற்றுள்ளார். ஆகையால் மற்ற அமைச்சர்களுடைய ஒத்துழைப்புடன்தான் அவர் அரசாங்கத்தைச் சுமுகமாக நடத்தில் செல்ல முடியும். முதலமைச்சர் மற்றும் பிற அமைச்சர்களின் மாத ஊதியம் 2,05,000 ஆகும்.

முதல்வர் எந்தவொரு சபையின் உறுப்பினராயிருக்கிறாரோ அச்சபையின் தலைவராகப் (Leader of the House) பணியாற்றுகிறார். அரசாங்கத்தின் பொதுவான கொள்கைகளுக்கு சட்டமன்றத்திடம் பொறுப்பேற்கிறார். கேள்விகள், துணைக் கேள்விகள் கேட்பதன் மூலம் அமைச்சர்கள் தாக்கப்படும் பொழுதெல்லாம் அவர்களுக்கு துணைநின்று விடையளிக்கம் பொறுப்பு முதல்வருக்கு உண்டு. அரசாங்கத்திலுள்ள பல்வேறு இலாக்காக்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்த மேற்பார்வை செய்கிறாா. முதல்வர் அரசாங்கத்தின் பேச்சாளர் ஆவார். அவருடைய அறிக்கைகளும், வாக்குறுதிகளும், அறிவிப்புகளும் அதிகாரப்பூர்வமானவையாகும். மாநில அரசாங்கத்திலுள்ள உயர் பதவிகளுக்கு நியமனம் செய்வதில் தன்னுடைய செல்வாக்கை உபயோகப்படுத்த முடியும். முதல்வரை, மாநிலத்தின் உண்மை நிர்வாக அதிகாரி (Real Executive) என்று அழைக்கலாம்.

முதல்வருக்கும் ஆளுநருக்குமிடையே சில நேரங்களில் கீழ்க்கண்ட பொருள்களைப் பற்றிய கருத்துவேறுபாடுகள் தோன்றலாம். மன்னிப்பு வழங்குதல், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நியமனம், பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் நியமனம், ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கும் அந்தரங்க அறிக்கைகள் என்பன ஆகும். ஆனால் பொதுவாக முதல்வரின் பரிந்துரைகளை ஆளுநர் ஏற்றுக்கொள்கிறார்.

ஆளுநர், மாநிலத் தலைவராகவும், அரசியலமைப்பிற்குட்பட்ட தலைவராகவும் (Constitutional Head) பணியாற்றுவதால், நமது ஆட்சி முறை பாராளுமன்ற முறை அரசாங்கமாதலால், அவர் அமைச்சரவையின் அறிவுரையின்படி, முக்கியமாக முதலமைச்சரின் அறிவுரையின்படி நடந்துகொள்ள வேண்டியுள்ளது.

**IV.6. State Judiciary (High Courts)**

**மாநில நீதித்துறை:**

1862-ல் உயர்நீதிமன்றங்கள் கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டன. காலப்போக்கில் பிரிட்டிஷ் இந்தியாவின் ஒவ்வோர் மாகாணமும் ஓர் உயர்நீதிமன்றத்தைக் கொண்டிருந்தது.

1950-க்கு பிறகு தோற்றுவிக்கப்பட்ட உயர்நீதிமன்றங்கள் அண்டை மாநிலங்களுக்கும் உயர்நீதிமன்றங்களாக விளங்கியது. மாநில அளவில் உயர்நீதிமன்றங்களே மிக உயர்ந்த நீதிமன்றங்களாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வோர் மாநிலத்திற்கும் உயர்நீதிமன்றத்தைத் தோற்றுவிக்க வழிவகுக்கிறது. ஆனால் 1956-ஆம் ஆண்டு ஏழாவது திருத்தச்சட்டம், இரண்டு மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கென்று ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தை நிறுவ நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியது.

எடுத்துக்காட்டாக பஞ்சாப், ஹரியானா மற்றும் யூனியன் பிரதேசமான சண்டிகர் ஆகிய பகுதிகளுக்குச் சண்டிகரிலுள்ள உயர்நீதிமன்றம் பொது நீதிமன்றமாக உள்ளது. இதேபோன்று கவுகாத்தியிலுள்ள உயர்நீதிமன்றம் நான்கு வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், நாகாலாந்து, மிசோரம், அருணாச்சலப் பிரதேசம் போன்றவைகளுக்கு பொது நீதிமன்றமாக உள்ளது. இந்நீதிமன்றத்தின் கிளைகள் இட்டாநகர், கொஹிமா, அய்ஸ்வால் ஆகிற இடங்களில் அமைந்துள்ளன.

டெல்லி ஒரு மாநிலமாக இல்லாதபோதும் தனக்கென்று சொந்தமாக ஓர் உயர்நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நீதிமன்றமும் தலைமை நீதிபதி மற்றும் பல நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

உயர்நீதிபதிகளின் எண்ணிக்கை குடியரசுத் தலைவரால் தீர்மானிக்கப்படுகிறது. தற்போது இந்தியாவில் 28 மாநிலங்கள் (2019 ஜனவரியில் தோற்றுவிக்கப்பட்டு அமராவதியில் இயங்கும் ஆந்திரப் பிரதேசத்தின் புதிய உயர்நீதிமன்றத்தையும் சேர்த்து) மற்றும் 9 யூனியன் பிரதேசங்களுக்கும் சேர்த்து 25 உயர்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

உயர் நீதிமன்றத்தில், தலைமை நீதிபதியும் குடியரசுத் தலைவரால் நிச்சயிக்கப்படும் எண்ணிக்கையுள்ள நீதிபதிகளும் இடம் பெறுகிறார்கள். இவர்களை குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார். நியமிக்கும் முன்பாக, இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும், மாநில ஆளுநரையும் மாநிலத் தலைமை நீதிபதியையும் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

மாநில உயர் நீதிமன்ற நீதிபதி 62 வயது முடியும்வரையில் பதவியிலிருக்கலாம். அல்லது அதற்கு முன்னதாகவே குடியரசுத் தலைவருக்கு எழுத்து மூலம் தெரிவித்து பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம்.

இந்திய தலைமை நீதிமன்றத்து நீதிபதியை பதவியிலிருந்து நீக்குவதற்கு பின்பற்றப்படும் முறையே மாநில நீதிபதியை நீக்குவதற்கும் பொருந்தும். மாநில நீதிபதி தலைமை நீதிமன்றத்திற்கு நீதிபதியாகவோ அல்லது வேறு மாநிலத்திற்கு நீதிபதியாகவோ மாற்றப்படலாம்.

மாநில உயர் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்படுபவர் இந்தியக் குடிமகனாகவும், நீதித்துறையில் பத்து ஆண்டுகள் நீதிபதி பதவி வகித்தவராகவும் அல்லது பத்து ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றிருக்க வேண்டும். மாநில நீதிபதியாக நியமிக்கப்பட்டவர் பதவியேற்கும் முன்னர் ஆளுநர் முன்னிலையில் பதவிக்கான உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

தற்போது மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு மாத ஊதியமாக ரூ.2,50,000-மும் பிற நீதிபதிகளுக்கு ரூ2,25,000-மும் வழங்கப்படுகின்றன. இது தவிர குடியரசுத் தலைவரால் அவ்வப்போது நிச்சயிக்கப்படும் செலவுப் படிகளும் வழங்கப்படுகின்றன. நீதிபதிகள் பதவிக்காலத்தில் அவருக்குண்டான செலவுப் படிகளையோ விடுமுறைகளைப் பற்றிய உரிமைகளையோ மாற்றியமைத்தல் கூடாது.

இந்தியாவில் தலைமை நீதிபதியைக் கலந்தாலோசித்து மாநில நீதிபதிகளை வேறு மாநிலத்திற்கு குடியரசுத் தலைவர் மாற்றலாம்.

மாநிலத் தலைமை நீதிபதியின் பதவி வெற்றிடமானாலோ அல்லது பணிகளைச் செய்ய முடியாத நிலையிலிருந்தாலோ அப்பணிகளை ஏற்று நிறைவேற்றுவதற்காக, மற்ற நீதிபதிகளிலிருந்து ஒருவரை தற்காலிக தலைமை நீதிபதியாக குடியரசுத் தலைவர் நியமிப்பார்.

மாநில உயர் நீதிமன்றத்தில் தற்காலிகமாகப் பணிகள் மிகுந்திருந்தாலோ அல்லது பெருமளவில் பணிகள் மிச்சமிருந்தாலோ, மாநில நீதிமன்றத்தின் நீதிபதிகள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று குடியரசுத் தலைவர் கருதினால், தகுதியுள்ளவர்களை கூடுதலான நீதிபதிகளாக இரண்டாண்டிற்கு அதிகமாகாத பதவிக் காலத்திற்கு நியமிக்கலாம்.

உயர் நீதிமன்றம் மாநிலம் முழுவதும் நீதி அதிகாரத்தைச் செலுத்துகிறது. அரசியலமைப்பில் மாநில நீதிமன்றங்களுக்கான அதிகாரங்கள் விரிவான முறையில் கூறப்படவில்லை. 1935-ம் வருட இந்திய அரசாங்கச் சட்டம் மாநில நீதிமன்றங்களுக்கு கொடுத்திருந்த அதிகாரங்களையே தற்போதைய நீதிமன்றங்களும் பெற்றிருக்கின்றன.

**IV.7. Judicial Review System.**

**மாநில நீதித்துறை – நீதி வரையறை மற்றும் அதிகாரங்கள்:**

**மூல வழக்கு அதிகாரம்:**

அடிப்படை உரிமைகளை மக்களுக்கு நிலைநாட்டுவதற்காக உயர்நீதிமன்றம் கட்டளைகள், ஆணைகள் இடுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது. இந்த ஆணைகள் மாநிலத்திலுள்ள எந்தவொரு அதிகாரிக்கும் இடப்படும் கட்டளை, திருமணம், நீதிமனறங்கள் மீத அவதூறு இவை சம்பந்தமாகவும் மூல வழக்கு அதிகாரம் பெற்றுள்ளது.

**மேல் வழக்கு விசாரணை அதிகாரம்:**

மாநிலத்திலுள்ள பல்வேறு முன்சீப், மாவட்ட நீதிமன்றங்களிலிருந்து மேல் முறையீடாக வரும் சிவில், குற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும் மாநிலத்திலுள்ள (இராணுவ நீதிமன்றம் தவிர) எல்லா நீதிமன்றங்கள் மீதும் மேற்பார்வை செலத்துகிறது.

**பதிவுச் சான்று மன்றம்:**

உயர்நீதிமன்றம், பதிவுச் சான்று மன்றமாக (Court of Records) அதற்குண்டான அதிகாரங்களோடு இயங்குவதுடன் தன்னை அவமதித்தவர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் பெற்றுள்ளது.

கீழ் நீதிமன்றதிலுள்ள ஒரு வழக்கை முடிப்பதற்கு சம்பந்தமான முக்கியமான ஒரு சட்டத்தைச் பற்றிய அரசியல் ரீதியான விளக்கம் தேவையென்று உயர்நீதிமன்றம் கருதினால், அவ்வழக்கை தன்னகத்தே வரவழைத்துக் கொள்ளும் அதிகாரமுண்டு.

உயர்நீதிமன்றம் தன்னுடைய அதிகாரிகளையும், ஊழியர்களையும் நியமித்துக்கொள்ளவும், அவர்கள் மீது கட்டுப்பாடு செலுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சிவில் வழக்குகளுக்குத் தனியாக நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்களுக்கான நீதிபதிகள், ஆளுநர் அவர்களால், உயர்நீதிமன்றத்துடன் கலந்து ஆலோசனை செய்து நியமிக்கப்படுகின்றார்கள்.

**பேராணை அதிகாரங்கள்:**

இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 226 அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமின்றி மற்ற நோக்கங்களுக்காகவும் பேராணைகளை வெளியிடும் அதிகாரங்களை உயர்நீதிமன்றங்களுக்கு வழங்குகிறது.

சட்டப்பிரிவு 32-இன் கீழ் உச்ச நீதிமன்றம் வழங்கும் நீதிப்பேராணைகள், ஆணைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் போன்றே உயர் நீதிமன்றமும் அவைகளை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

இந்த சட்டப்பிரிவுகளின் கீழ் நீதிப் பேராணைகளை வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு வழங்கிய அதிகாரம் பெரியதாகும். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் மட்டுமே உச்ச நீதிமன்றம் இவைகளை வெளியிடுகிறது.

உயர்நீதிமன்றம் இது போன்ற வழக்குகளில் மட்டுமின்றி சாதாரணச் சட்ட மீறலுக்கும் நீதிப்பேராணைகளை (ஆட்கொணர்வு நீதிப்பேராணை, கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை, தடையுறுத்தும் நீதிப்பேராணை, தகுதி வினவும் நீதிப்பேராணை, ஆவணக் கேட்பு போராணை), வெளியட முடியும்.

**மேற்பார்வை அதிகாரம்:**

இராணுவ நீதிமன்றங்களைத் தவிர மற்ற அனைத்து சார்பு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை உயர்நீதிமன்றம் பெற்றுள்ளது.

**கீழ் நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்ப பெறும் அதிகாரம்.**

பொதுச் சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஓர் ஆணையை வெளியிடச் செய்தல்.

பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் கீழ்நீதிமன்றங்கள் புத்தகங்கள், பதவிகள், கணக்குகளைப் பராமரித்தல்.

ஷெரிப், எழுத்தர்கள், அலுவலர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் ஆகியோருக்கான கட்டணத்தைச் செலுத்துதல் போன்றவை குறித்து தீர்மானித்தல்.

**ஆவணங்களின் பாதுகாப்புப் பெட்டகம்:**

உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அனைத்து முடிவுகள் மற்றும் தீர்ப்புகள் அச்சடிக்கப்பட்ட சான்றாதாரமாக பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் எழும் கேள்விகளுக்கு தீர்வாக கடந்தகால தீர்ப்புகள் உதவுகின்றன. இதனால் உயர்நீதிமன்றம் பதிவேடுகளின் நீதிமன்றமாகச் செயல்படுகிறது.